**செய்தி வெளியீடு எண் : 1303** **நாள் : 28.08.2024**

**<u>செய்தி வெளியீடு</u>**

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் கடந்த ஜூன் 2023 முதல் தமிழக அரசால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி தமிழக அரசின் சார்பில் பல்வேறு துறைகளால் கருத்தரங்கங்கள், புகைப்படக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழக மக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் பயனளிக்கின்றவிதம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையிலும் மற்றும் மூத்த அமைச்சர்கள் தலைமையிலும் அமைக்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

இக்குழுக்களில் ‘சட்டமன்ற நாயகர்–கலைஞர்’ என்ற விழாக் குழுவானது, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைவராகவும், இணைத் தலைவர்களாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மற்றும் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்கள் ஆகியோரையும், உறுப்பினர்களாக முன்னாள் பேரவைத் தலைவர் திரு. ஆர். ஆவுடையப்பன் அவர்கள், முன்னாள் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், முன்னாள் பேரவைச் செயலாளர்கள் திரு. ப. டில்லிதுரை அவர்கள் மற்றும் திரு. மா. செல்வராஜ் அவர்கள், தினத்தந்தி நிர்வாக ஆசிரியர் திரு. DER. சுகுமார் அவர்கள் மற்றும் பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் அவர்கள் ஆகியோரைக் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு கடந்த ஒரு வருடத்தில் 57 கல்லூரிகளிலும், 63 பள்ளிகளிலும் ‘நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின்மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது’ என்ற தலைப்பில் கருத்தரங்கங்களை சிறப்பாக நடத்தியது. இதன்மூலம் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தின்மூலம் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய மகத்தான தொண்டையும், தமிழகம் முன்னேற்றம் பெறவும், தமிழினம் எழுச்சி பெறவும் அவர் ஆற்றிய அரும் பணிகள் குறித்தும், தமிழக மக்களும், மாணவச் செல்வங்களும் தெரிந்துகொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்திருந்தன.

கடந்த 27–2–2024 அன்று சென்னை, மாநிலக் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுக்கான மாநிலக் கருத்தரங்கம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தப்பெற்றது. இதில் 57 கல்லூரிகளிலிருந்தும் முதல் இடத்தைப் பெற்ற மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்தினர். அதன் தொடர்ச்சியாக நாளை (29–8–2024) பள்ளி மாணவர்களுக்கான மாநிலக் கருத்தரங்கம் சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையிலுள்ள, Rosary Matriculation Higher Secondary School–லில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் 61 மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு, தங்களது பேச்சாற்றலை வெளிப்படுத்த இருக்கிறார்கள்.

கலைஞர் அவர்களது சேவைகளை நினைவுகூரும் வகையில் நடைபெறவிருக்கும் மாநிலக் கருத்தரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு.பிச்சாண்டி அவர்கள், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்கள், முன்னாள் பேரவைச் செயலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் திரளாகக் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu